# குறிஞ்சி மலர்

---

**Que.1. வரைந்த ஓவியம், பாடி ஆடினாள், விரைந்து சென்றான், பாடிய பாடல், உண்டு முடித்தான், படித்த கதை, ஓடி வந்தான், எழுதிய கவிதை – இத்தொடர்களிலிருந்து வினையெச்சத் தொடர்களையும் பெயரெச்சத் தொடர்களையும் தேர்ந்து பட்டியலிடுங்கள். [Marks :(2)]**

**Ans.** வரைந்த ஓவியம்

பாடிய பாடல்

படித்த கதை

எழுதிய கவிதை

பாடிய பாடல்

வினையெச்சம் - பாடி ஆடினாள்

விரைந்து சென்றான்

உண்டு முடித்தான் 1

ஓடி வந்தான்

**Que.2. 'அகிலா ஓவியம் வரைந்தாள்' – இத்தொடரில் இடம்பெறும் வினைமுற்றுச் சொல்லை எழுதி அதற்கான விளக்கம் எழுதுங்கள்.**

**Ans.** வரைந்தாள் 1

ஒரு வினை முற்றுப் பெறுவதைக் குறிப்பதால் வினைமுற்று

**Que.3. பாறை உடைப்பதால் ஏற்படும் தீமைகளை விளக்கி "பாறை உடைப்பும் தீமையும்" என்ற தலைப்பில் கீழ்க்கண்ட குறிப்புகளின் அடிப்படையில் கட்டுரை எழுதுங்கள். (நீர் நிலைகள் அழிவு – ஒலி மாசு – பசுமை அழிவு – தாக்கப்படும் நோய்கள் – கட்டிடங்கள் பாதிப்பு)**

**Ans.** வடிவம் 1

கருத்துக்களைக் கோர்வையாக்கல் 2

மேற்கோள் 1

மொழிநடை 1

**Que.4. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் தேவையை உணர்த்தும் விதம், சுற்றுச்சூழல் தினமாகிய ஜூன் 5 –ஆம் நாள் பள்ளியில் நடைபெறும்**

**காலைக் கூட்டத்தில் எடுத்துக்கொள்வதற்கேற்ற உறுதிமொழி தயார் செய்யுங்கள்.**

**Ans.** கருத்துக்கள் 2

மொழிநடை 1

**Que.5. ஜுன் 5, சுற்றுச்சூழல் தினத்தன்று உங்கள் பள்ளிக் கலையரங்கில் ‘பாறையுடைப்பும் சுற்றுச்சூழல் மாசும்’ என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கிற்கான சுவரொட்டி தயார் செய்யுங்கள்.**

**Ans.** வடிவம் **1**

அனைத்துத் தகவல்களும் இடம்பெறும் விதம் 2

**Que.6. பாறையுடைக்கும் மையங்களின் ஓசைக் கட்டுப்பாட்டின் அளவு…………**

**அ) 135 டெசிபல் ஆ) 145 டெசிபல்**

**இ) 155 டெசிபல் ஈ) 125 டெசிபல்.**

**Ans**. ஈ) 125 டெசிபல்.

**Que.7. பாறையுடைக்கும் மையங்களினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தீமைகளைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** ஒலி மாசு, பாறைத் துகள்கள், கட்டிடங்கள் பாதிப்பு, உடல்நலக்குறைவு.

**Que.8. சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு………..**

**அ) 1986 ஆ) 1985**

**இ) 1968 ஈ) 1964**

**Ans.** அ) 1986

**Que.9. பின்வரும் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளியுங்கள்.**

**வினா**

**33) அப்பச்சி மலை என்ற சிறுகதையை எழுதியவர் குழித்துறை எஸ். ஜெபமணி. இவர் ‘கனல்’ என்ற பெயரில் நாவல் படைத்து வருகிறார். ‘வெள்ளரிப் பிஞ்சு’ என்பது இவருடைய சிறுகதைத் தொகுப்பு. மேடை நாடகங்கள் வழியாக மக்களோடு பேசுகிறார்.**

**(அ) குழித்துறை எஸ்.ஜெபமணியின் சிறுகதைத் தொகுப்பு யாது?**

**(ஆ) இவர் படைத்த நாவலின் பெயர் என்ன?**

**(இ) இவருடைய சொந்த இடம் எது?**

**Ans.** (அ) வெள்ளரிப் பிஞ்சு

(ஆ) நாவல்

(இ) குழித்துறை

**Que.10. "தாத்தோவ் நான் மீண்டும் வருவேன். நான் வளர்ந்து இதன் பக்கத்தில் ஒரு குடிசையையும் போட்டுவிட்டு எப்போதும் உன்கூடவே இருப்பேன் தாத்தா" – இது ஜெறியின் கூற்று. முதியோர் இல்லங்கள் பெருகிவரும் இன்றைய சூழலை ஜெறியின் மனிநிலையோடு ஒப்பிட்டு குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** முதியோர் மீது அக்கறை, அன்பு, தற்போதைய நிலையோடு ஒப்பிடும் திறன்.

**Que.11. "தாத்தா…ஐயோ…தாத்தா… உன்னைக் கொன்னுட்டாங்களே பாவிகள்…" என ஏங்கி அழும் ஜெறிக்கு நீங்கள் கூறும் ஆறுதலைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** மாணவன் ஜெறியின் நிலையை உணர்ந்து கூறும் விதம்.

**Que.12. தூய தமிழ் நடையில் எழுதுங்கள்.**

**"என் ராசா….நீ அழாதேடா… நான் எங்கே சாவப்பொறேன். நான் இங்கே தான்பா வாழ்ந்து சொண்டிருப்பென். நீ தினமும் பார்க்க பிரியப்படுவியே அப்பச்சி மலை. அதில் உள்ள நீரோடை, மேகங்கள், மரங்கள், பூக்கள், பறவைகள் இங்கு எல்லாம் நான் இருப்பேன்டா. கண்ணா…. இப்ப நான் எடுத்த பிறவு உடம்ப மண்ணோடு மண்ணாக கலக்க வேண்டிய காலம் வந்தாச்சு. ஆனால் என் உயிர் இங்கே தானப்பா இருக்கும். அப்பச்சி மலை உள்ள வரைக்கும் நான் வாழ்ந்திட்டு தான்பா இருப்பேன்"**

**Ans.** தூய தமிழ் நடை

**Que.13. "அப்பச்சி மலை" என்ற கதையில் நகர வாழ்க்கையும் கிராம வாழ்க்கையும் விளக்கப்பட்டள்ளது. அவ்விரு வாழ்க்கைச் சூழலையும் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** கிராம வாழ்க்கையின் அழகு.

நகர வாழ்க்கையின் நெரிசல்.

மாசு……

மாணவன் கருத்து.

**Que.14. கீழ்க்கண்ட நிகழ்வுகளை வரிசைப்படுத்துங்கள்**

**அ) விமுறைக்குக் கிராமத்திற்குச் சென்றான்.**

**ஆ) நகரத்தில் பத்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான்.**

**ஜ ெறி இ) தாய் மடியில் முகம் புதைத்து அழுதான்.**

**ஈ) அப்பச்சி மலையைப் பார்க்க ஓடினான்.**

**Ans.** ஆ), (அ), (ஈ), (இ).

**Que.15. அப்பச்சி மலையை நேசித்த ஜெறி அம்மலையில் யார் இருப்பதாக உணர்ந்தான்?**

**அ) அப்பா ஆ) அம்மா இ) தாத்தா ஈ) பாட்டி**

**Ans.** இ) தாத்தா

**Que.16. இனிமையான குளுகுளுப்பில் ஜெறி தன்னை மறந்து போனான் - இதுபோன்று**

**கீழ்க்கண்டவற்றுள் எவையேனம் இரண்டு சொற்களை வாக்கியத்தில் அமையுங்கள்.**

**பட பட, தொண தொணப்பு, ஏங்கிஏங்கி.**

**Ans.** பொருத்தமான வாக்கியங்கள்

**Que.17. பொதிகை மலை ---------------- மன்னனுக்கு உரியது.**

**(அ. சேரன் (ஆ) சோழன்**

**(இ) பாண்டியன் (ஈ) பல்லவன்.**

**Ans.** பாண்டியன்

**Que.18. நீலகிரி மலைக்கு அப்பெயர் வருவதற்கான காரணங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** நீலநிறப் பூக்கள் - நீலநிற மலை.

**Que.19. இரவிகுளம் தேசியப் பூங்காவில் ---------------------- உயிரினம் பாதுகாக்கப்படுகிறது.**

**Ans.** – வரையாடு

**Que.20. பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒருமுறைப் பூக்கும் குறிஞ்சி மலர் பற்றி சிறு குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** : வளரும் இடம், வகைகள், தன்மைகள்.

**Que.21.**



**படத்தை உற்றுநோக்கி கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**(அ) படத்தில் உள்ள விளங்கு எது ?**

**(ஆ) இவை வாழும் இடங்கள் யாவை ?**

**(இ) இவ்விலங்கைப்பற்றி சிறு குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** (ஆ) இரவிகுளம் தேசிய பூங்கா, வால்பாறை,......

:(இ) வரையாடு கடல் மட்டத்திலிருந்து 1600 மீட்டர் உயரத்தில் வாழும். மலை முகடுகளில் வாழும்...............

**Que.22. மலைகளை அழிப்பதால் மழைவாழ் உயிரினங்கள் அழிகின்றன.எனவே சட்டவிரோதமான இச்செயலைத் தடை செய்யும் பொருட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரிக்கு புகார் கடிதம் எழுதுங்கள்.**

**Ans.** வடிவம், கருத்து (மழை வளம், உயிர்ப் பெருக்கம், நடைபெறும் பிரச்சினை), மொழிநடை.

**Que.23. 13) சர்வதேச மலைதினமாகிய டிசம்பர் 11-ம் தேதி பள்ளி காலைக் கூட்டத்தில் எடுத்துக்கொள்வதற்காக உயிரினங்களின் வாழிடமாக விளங்கும் மலைகளைப் பாதுகாக்கும் நோக்கில் உறுதிமொழி ஒன்று தயாரியுங்கள்.**

**Ans.** மலை வளங்களை உணர்தல் , உறுதியேற்றல் , மொழிநடை

**Que.24. சர்வதேச மலை தினமாகிய டிசம்பர் 11-ம் தேதியன்று பசுமை மன்றத்தின் சார்பாக நடைபெறும் விழிப்புணர்வு ஊர்வலத்தில் ஏந்திச்செல்வதற்கான ஊர்வல அட்டை வாசகங்கள் தயார் செய்யுங்கள். (4 வாசகங்கள் )**

**Ans.** மலைகளைக் காப்போம் நாட்டைக் காப்போம்

மலையைக் காப்போம் மழை பெறுவோம்

மலைகள் நாட்டின் அரண்

மலைவளம் நாட்டு வளம் - இது போல்வன

**Que.25. குறிஞ்சிப்பூ வளரும் பகுதிகளைக் காக்க இயக்கம் உருவாகி உள்ளது.எனினும் குறிஞ்சிமலர் பிரதேசங்களைக் சீரழிக்கப்படுகின்றன.இவற்றைக் காக்க மக்களை வலியுறுத்தும் விதம் துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்.**

**Ans.** மலைப்பகுதிகளை அழிப்பதால் ஏற்படும் தீமைகள்-காப்பதால் ஏற்படும் நன்மைகள்-மக்களுக்கு செய்தி.

**Que.26. பொருத்தி எழுதுங்கள்.**

**(அ) முருகன் - நீலக்குறிஞ்சி**

**(ஆ) குறிஞ்சி நாடன் -குறுஞ்சுப்பூ மாலை**

**(இ) நீலகிரி -கருங்காற் குறிஞ்சி**

**(ஈ) மதுரைக் காஞ்சி -குறிஞ்சித்தேன்**

**Ans.** (அ) குறுஞ்சுப்பூ மாலை

(ஆ)குறிஞ்சித்தேன்

(இ) நீலக்குறிஞ்சி

(ஈ) கருங்காற் குறிஞ்சி

**Que.27. சரியான கூற்றுக்களைக் கண்டறிந்து எழுதுங்கள்**

**(i) குறிஞ்சிச் செடி ஆண்டுக்கு இருமுறை பூக்கும்**

**(ii)தன் தண்டு சிவப்பாக இருக்கும்**

**(iii)45 வகையான குறிஞ்சிச் செடிகள் உண்டு**

**(iv)இது மலைச் சரிவுகளில் வாழும் புதர்ச்செடி**

**(அ) கூற்று (i),(ii) சரி (ஆ) கூற்று (i),(iv)சரி**

**(இ)கூற்று (i),(ii) தவறு (ஈ)கூற்று (i),(iii) தவறு**

**Ans.** (ஆ) கூற்று (i),(iv)சரி

(ஈ)கூற்று (i),(iii) தவறு

**Que.28. "இலங்கு வெள்ளருவியோடு சிலம்பகத் திரட்டசக்**

**கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்து"**

**இப்பாடல் வரிகளில் இடம்பெற்ற நூல் எது ?**

**(அ) பட்டினப்பாலை (ஆ) ஆசாரக்கோவை**

**(இ) முதுமொழிகாஞ்சி (ஈ) மதுரைக்காஞ்சி**

**Ans.** மதுரைக் காஞ்சி

**Que.29. குறிஞ்சிச் செடி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் ?**

**Ans.** 12

**Que.30. "மன்னுயிரறியா துன்னரும் பொதியில்"**

**-இவ்வரியில் இடம்பெறும் மலை எது?**

**Ans.** பொதிகை மலை.

**Que.31. பின்வரும் பாடல் வரிகளில் இடம்பெறும் மலைகளின் பெயர்களை எடுத்தெழுதுங்கள்.**

**"கயிலை எனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே**

**கனகமாமேரு எனநிற்கு மலை அம்மே**

**சயிலமலை தென்மலைக்கு வடமலைக்கு அம்மே**

**துங்காதிரி கூடமலை எங்கள்மலை அம்மே."**

**Ans.** கயிலை மலை, மேருமலை, சயிலமலை, திரிகூடமலை.

**Que.32. நயம் பாராட்டி எழுதுங்கள்.**

**" கொல்லிமலை எனக்கினிய செல்லிமலை அம்மே**

**கொழுநனுக்குக் காணி மலை பழனிமலை அம்மே**

**எல்லுலவும் விந்தைமலை எந்தை மலை அம்மே**

**இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே"**

**[ செல்லி - தங்கை, எந்தை - என் தந்தை, தமையன் - தம்பி, எல் - சூரியன்.]**

**Ans.** பாடலின் பொருள் -1

எதுகை இயைபு -2

வடிவம் -1

மொழிநடை -1

**Que.33. "உயிர்களிடத்தில் தழைக்க நதியை அனுப்பி**

**உதவும் மலை நாதா நீ**

**உலவாதமர்ந்தே பலபோர் துயரை**

**ஓட்டிட அறிவாயோ ?"**

**இக்கவிதை வரிகளின் கருத்தின் அடிப்படையில் மலையின் பயன்களைப் பற்றி சிறுகுறிப்பு எழுங்கள்.**

**Ans.** நதிகளின் உறைவிடம், காடுகள், மரங்கள், உயிரினங்களின் வாழிடம், மழை பொழிதல்.

**Que.34. அகர வரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.**

**வரை, முகில், அரவு, ராஜ்ஜியம்**

**Ans.** அரவு - பாம்பு

முகில் - மேகம்

வரை - மலை

ராஜ்ஜியம் - நாடு.

**Que.35. நரன் என்ற சொல்லின் பொருள் .................**

**(அ) இறைவன் (ஆ) மன்னன்**

**(இ) மனிதன் (ஈ) நண்பன்.**

**Ans.** (இ) மனிதன்.